இப்பரீட்சைகள் கொழும்பில் நடைபெறும். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

3.1 ***எழுத்துமூலப் பரீட்சை.-*** கீழே தரப்பட்டுள்ள எழுத்துமூலப் பாடங்கள் ஒவ்வொன்றும் தலா 100 புள்ளிகளைக் கொண்டிருக்கும் :-

| வினாத்தாள் | கால வரையறை |
|---|---|
| நிதி முறைமைகள் | 2 மணித்தியாலம் |
| தாபன விதிக்கோவை மற்றும் அலுவலக நடைமுறை | 2 மணித்தியாலம் |
| ஆங்கிலம் | 2 மணித்தியாலம் |
| பொது அறிவு | 1 மணித்தியாலம் |

**குறிப்பு**.- (1) ***கணக்கீடு.-*** அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் கணக்கு முறைகள், கணக்குத் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடுதலை இவ்வினாத்தாள் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடை அளிக்கப்படல் வேண்டும்.

(2) ***தாபன மற்றும் அலுவலக நடைமுறைகள்.-*** அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப் படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடு தலையும் இவ்வினாத்தாள் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடை அளிக்கப்பட வேண்டும்.

(3) ***ஆங்கிலம்.-*** விண்ணப்பதாரியின் ஆங்கில கிரகித்தல் அறிவையும் எழுத்திலான தொடர்பாடல் ஆகியவற்றைப் பரீட்சிப்பதாக இவ் வினாத்தாள் அமைந்திருக்கும். சகல வினாக்களுக்கும் விடை அளிக்கப்படல் வேண்டும்.

(4) ***பொது அறிவு.-*** இலங்கையின் அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதாரப் பின்புலம், வரலாறு மற்றும் புவியியல் உட்பட நிகழ்கால சர்வதேச விவகாரங்கள் தொடர்பான பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடையளிக்கும் வகையிலான மாதிரி வினாக்களை உள்ளடக்கியிருப்பதுடன் அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

3.2 ***நேர்முகப் பரீட்சை:***

3.2.1 நேர்முகப் பரீட்சைக்குரிய புள்ளிகள் 100 என்பதுடன் நேர்முகப் பரீட்சையானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும்.

3.2.2 பாடம் ஒவ்வொன்றிலும் 40 சதவீதப் புள்ளிகளையும் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்றிருப்பதுடன் கூட்டு மொத்தமாக 200 புள்ளிகளையோ அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையோ பெறும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் களாவர். எனினும் மேற்போந்த வெட்டுப் புள்ளிக்கு அமைவாக தகைமையடைந்த வேட்பாளர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லாமலிருக்குமிடத்து வெட்டுப்புள்ளி விடயத்தைப் பற்றி முடிவெடுப்பதற்காக உரிமையை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

3.2.3 மேலுள்ள 3.2.2 பந்தியின் பிரகாரம் நேர்முகப்பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்யும் சகல விண்ணப்பகாரர்களினதும் அகர வரிசையில் தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் கிடைக்கப்பெற்றவுடன் எழுத்து மூலப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் விண்ணப்பகாரர்களினால் திறமை அடிப்படை யில் பெறப்பட்ட முழு மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று படிவம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும். இத்துடன் பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பகாரர்களுக்கும் நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

4. **பதவிக்கமர்த்தும் நியதிகள்:**

4.1 தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் நியமனம் பெற்ற ஒருவர் தாம் இணைக்கப்பட்டுள்ள வேலைத்தலத்தில் நியமனத்திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கடமைகளைப் பொறுப்பேற்கத் தவறுமிடத்து அவருடைய நியமனம் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படுமென்பதுடன் இத்தொடர்பில் செய்யப்படும் மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4.2 இப்பரீட்சைகளின் பெறுபேறுகள் மூலம் தெரிவாகும் உத்தியோகத்தர் இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் குறிப்பிட்ட ஒரு வருட காலத்திற்கு கொழும்பில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சேவையாற்றல் வேண்டும். இச்சேவைக் காலத்தில் அவரது வேலை

